**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.**
**முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர், சீர்காழி**.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.307/2025
CNR.NO.TNMY08-00557-2025

<table>
<tr><td>குற்றமுறையீட்டாளர் :</td><td>அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>ஆனைக்காரன்சத்திரம் காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்,<br>குற்ற எண்.440 /2023</td></tr>
<tr><td colspan="2">/எதிராக/</td></tr>
<tr><td>குற்றம்சாட்டப்பட்டவர்:</td><td>ராஜகோபால், 56/2023, த/பெ. ராஜமாணிக்கம்<br>பெரியதெரு, கற்பள்ளம், சீர்காழி தாலுகா</td></tr>
<tr><td>குற்றச்சாட்டு</td><td>இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 294(b), 352, 354, 506(i)</td></tr>
<tr><td>குற்றம் நிகழ்ந்த நாள்</td><td>26.09.2023</td></tr>
<tr><td>தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்</td><td>29.09.2023</td></tr>
<tr><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td>29.09.2023</td></tr>
<tr><td>எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td>05.10.2023</td></tr>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு 251-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள்</td><td>25.11.2024</td></tr>
<tr><td>விசாரணை தொடங்கிய நாள்</td><td>30.06.2025</td></tr>
<tr><td>விசாரணை முடிவடைந்த நாள்</td><td>30.03.2026</td></tr>
<tr><td>BNSS 359-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம்</td><td>--</td></tr>
<tr><td>முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள்</td><td>
<table>
<tr><th></th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.1</td><td>30.06.2025</td><td>30.06.2025</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.2</td><td>30.06.2025</td><td>30.06.2025</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.3</td><td>30.06.2025</td><td>30.06.2025</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.4</td><td>24.11.2025</td><td>24.11.2025</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.5</td><td>03.02.2026</td><td>03.02.2026</td></tr>
</table>
</td></tr>
</table>



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:41:50 +0530

| | |
|---|---|
| கு.வி.மு.ச.பிரிவு 313(1)(பி)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 25.02.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விபரம் | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | இல்லை |
| வழக்கு விசாரணையில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம் | போலிசார் சாட்சிகளை அழைத்து வருவதில் தாமதம் ஏற்பட்டது. |
| தீர்மானம் | எதிரி இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 352, 354, 506(i) ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானம் |
| முடிவு | முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எதிரியின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 352, 354, 506(i)ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 01.12.2023ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 30.03.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, குற்ற முறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சிங்காரவேலன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று நீதிமன்றம் வழங்கிடும்.

<u>**தீர்ப்புரை**</u>

1. இவ்வழக்கானது, கடந்த 26.09.2023ந் தேதி காலை 09.00 மணியளவில் புகார்தாரரும் சாட்சி–1ம் ஆன புனிதா என்பவரிடம் அவரது வீட்டுக்கு எதிர் வீட்டில் வசிக்கும் எதிரி ராஜகோபால், சாட்சி–1ன் திருமணத்திற்கு அவர் 1 கிராம் காசு செய்முறை செய்ததை திரும்ப கேட்க அதனால் வாய் தகராறு ஏற்பட்டு எதிரி புகார்தாரரை பார்த்து 'குச்சிக்காரி, தேவடியா மகளே' என்று காமகுரோதமாக திட்டி, கையால் அடித்து கீழே தள்ளிவிட்டு, பின்னர் அவரை



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:41:58 +0530

பார்த்து 'எங்களிடம் வைத்துக்கொண்டால் உன்னை காலி செய்து விடுவேன்' என்று கையை காட்டி கொலை மிரட்டல் விடுத்தது சம்பந்தமாக, எதிரியின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 352, 354, 506(i)ன் கீழ் தண்டிக்கத்தக்கது என்று கருதி ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 173(2)ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்கு ஆகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 01.12.2023 ம் தேதி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் 20.11.2024ம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 207ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. கடந்த 25.11.2024ம் தேதி எதிரியின் செயல் குறித்து இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 352, 354, 506(i) ன் கீழ் அவர் குற்றம் இழைத்ததாக சொல்லி குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரியிடம் விளக்கி கேட்டபோது, எதிரி 'பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும்' கூறினார். எனவே, இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.1 முதல் 5 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 4 குறியீடு செய்யப்பட்டது. பட்டியல் சாட்சிகள் 3, 6, 7 ஆகியோர்கள் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

4. இவ்வழக்கில் கடந்த 25.02.2026ம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து, அவற்றை கேள்விகளாக தொகுத்து குற்ற விசாரணை முறை சட்டம் 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரி அதனை மறுத்து 'பொய் சாட்சி, பொய் வழக்கு' என்றும், தனது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சி இல்லை' என்றும் கூறினார். ஆகவே, எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

5. அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.1 மற்றும் 5ன் சாட்சியத்தின் மூலமாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 4 ஆவணங்கள் வாயிலாகவும், அரசு தரப்பு வழக்கை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், அரசு தரப்பில் வாதிடப்பட்டது.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:42:04 +0530

6. இவ்வழக்கின் புகார்தாரர் முன்விரோதம் காரணமாக எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றும், அதனால் தான் அவரை அனுசரித்து வேறு நபர்கள் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், சட்டப்பிரிவுகளின் உட்கூறுகள் நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமாறும் வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனைகள்

i) இவ்வழக்கில் எதிரி மீதான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 352, 354, 506(i)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

8. **தீர்வு:–**

8.1) அரசு தரப்பு வழக்கு எவ்வாறு அமைந்துள்ளது மற்றும் இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலித்து பார்க்கும்போது, இவ்வழக்கின் புகார்தாரரும் எதிரியும் அண்டை வீட்டுக்காரர்கள் ஆவார்கள். புகார்தாரரின் திருமணத்திற்கு எதிரி செய்த 1கிராம் தங்க காசு செய்முறையை அவர் திரும்ப கேட்க சம்பவ நாளான 26.09.2023 காலை 9 மணியளவில் இருவருக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. மேலும், அப்போதே எதிரி புகார்தாரரை தாக்கி கொலைமிரட்டலும் விடுத்துள்ளார். அதைத் தொடர்ந்து 3 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் புகார்தாரரால் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு எதிரிக்கு எதிராக இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 294(b), 352, 354, 506(i) ஆகியவற்றின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசுதரப்பு வழக்கு இவ்வாறு அமைந்துள்ளது.

8.2) **அரசுதரப்பு சாட்சி 1.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர் இவ்வழக்கின் புகார்தாரர் என்பதும் இவ்வழக்கு குற்றசம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் என்பதும் தெரியவருகிறது. அவர் தனது முதல் விசாரணையில் எதிரி தனக்கு தெரிந்தவர் என்றும் அவர் புகார்தாரரின் நாத்தனாருடைய திருமணத்தில் 1/2 கிராம் நகையை மொய்யாக வைத்ததாகவும், அதனை அவரது நாத்தனார் திரும்ப செய்யவில்லை என கேட்டு அவரது நாத்தனாரிடம் எதிரி சண்டையிட்டதாகவும், அது சம்பந்தமாக சம்பவ நாளான 26.09.2023 அன்று காலை 9 மணியளவில் புகார்தாரருக்கும் எதிரியின் மனைவிக்கும் சண்டை ஏற்பட்டதாகவும், அப்போது அங்கு வந்த எதிரி 'வல்லார ஓழி உன்னை தான் எதிர் பார்த்தேன்' என்று சொல்லி தகாத



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:42:10 +0530

வார்த்தைகளால் திட்டி, கம்பி கொண்டு அவரது இடது காலில் தாக்கியதாகவும், அதில் அவருக்கு ரத்த காயம் ஏற்பட்டதாகவும், பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில் எதிரி அவரை 'குச்சிக்காரி' என சொல்லி திட்டவில்லை என்றும், எதிரி தன்னை கம்பியால் தாக்கி அதனால் ரத்தம் வந்தது பற்றி தான் போலிசாரிடம் கூறியதாகவும், இவ்வழக்கு புகாரை போலிசாரே எழுதிக்கொண்டதாகவும், சண்டை நடந்தது பற்றி பிரபு, பாலசுப்ரமணியம், வினோத் ஆகியோர்களுக்கு தெரியும் என்றும், அவர்கள் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றும், சம்பவம் நடந்த அன்றே தான் 12 மணியளவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

8.3) **அரசுதரப்பு சாட்சி 2,3.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர்கள் பார்வை மகசர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அவர்கள் தனது முதல் விசாரணையில் பார்வை மகசரில் தாங்கள் கையொப்பம் இடவில்லை என்று மறுத்து அரசுதரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்கள்.

8.4) **அரசு தரப்பு சாட்சி 4.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர் இவ்வழக்கு குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அரசுதரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. அவர் தனது முதல் விசாரணையில் இவ்வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சொல்லி அரசுதரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்.

8.5) **அரசு தரப்பு சாட்சி 5.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர் ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளர் என்பதும் இவ்வழக்கு புலன்விசாரணை அதிகாரி சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளதும் தெரியவருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், சிறப்பு உதவி ஆய்வாளர் அகோரமூர்த்தி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 நிலையம் ஆஜராகி 26.09.2023 பகல் 12 மணியளவில் கொடுத்த புகாரை பெற்று முதலில் மனு எண் 819/2023 கொடுத்து விசாரித்து அன்றைய தினமே எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 352, 354, 506(i) ன் கீழ் குற்ற எண் 819/2023ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், வழக்கை திரு. அருண்குமார் என்னும் உதவிஆய்வாளர் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்ததாகவும், எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியதாகவும், பின்பு புலன்விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:42:17 +0530

அளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக புகார், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவை முறையே அ.சா.ஆ.1 முதல் 4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர் தனது குறுக்கு விசாரணையில், புகார் காவல் நிலையத்தில் 26.09.2023ல் பெறப்பட்டு, CSR பதிவு செய்து விசாரிக்கப்பட்டு, 29.09.2023 தேதியன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், பார்வை மகசரில் காணப்படும் வீடுகளில் குடியிருக்கும் நபர்களை சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும், புகார்தாரர் தனக்கு ரத்தகாயம் ஏற்பட்டதாக விசாரணையில் போலிசாரிடம் தெரிவிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் மருத்துவர்கள் எவரும் விசாரிக்கப்படவில்லை என்றும், மருத்துவ சான்றுகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதா என்பது பற்றி ஆராயும்போது, இவ்வழக்கில் புகார்தாரரை தவிர ஏனைய தனிநபர் சாட்சிகள் அரசுதரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அதிலும் முக்கியமாக இவ்வழக்கு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 பிறழ் சாட்சியாகியுள்ளார். பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றொரு கண்ணுற்ற சாட்சி நீதிமன்றத்தில் அழைத்து விசாரிக்கப்படவில்லை. புகார்தாரர்/அ.சா.1ன் சாட்சியம் நம்பத்தகுந்ததா என்பது பற்றி பரிசீலிக்கும் போது அவர் இவ்வழக்கு புகாரில் உள்ள கையொப்பத்தையே அது தன்னுடையது அல்ல என்று சொல்லி மறுத்துள்ளார். மேலும் எதிரி அவரை கம்பியால் காலில் தாக்கியதாகவும், அதனால் அவருக்கு ரத்தகாயம் ஏற்பட்டதாகவும், அவர் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால், இவ்வழக்கில் விபத்துப் பதிவேடோ அல்லது காயச்சான்றிதழோ அரசு தரப்பால் தாக்கல் செய்யப்படவில்லை. அரசுதரப்பு வழக்கின்படி எதிரி புகார்தாரரை எந்த ஆயுதம் கொண்டும் தாக்கவில்லை அவருக்கு எந்த ஒரு புற காயமும் ஏற்படவில்லை மற்றும் அவர் எந்த மருத்துவமனையிலும் சிகிச்சை பெறவில்லை. மேற்சொன்ன வகையில் அ.சா.1ன் சாட்சியம் இவ்வழக்கின் புகார் மற்றும் அரசுதரப்பு வழக்கு ஆகியவற்றிற்கு முற்றிலும் முரண்பட்டதாகவும், மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகவும் காணப்படுகிறது. இத்தகைய சூழலில், உறுதியூட்டம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் அ.சா.1ன் சாட்சியத்திற்கு துணை நிற்காத நிலையில் மேற்படி நபரின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று கருதி எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசுதரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.



KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:42:24 +0530

10. முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எதிரியின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 352, 354, 506(i)ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

11. எதிரி இந்நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்கள் வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக இரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அதுகுறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:42:30 +0530

நீதித்துறை நடுவர்
சீர்காழி.

1. அரசுத் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திருமதி. புனிதா | புகார்தாரர் |
| அரசு தரப்பு சாட்சி.2 | திரு. ராமலிங்கம் | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.3 | திரு. மோகன் | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.4 | திரு. பாலகிருஷ்ணன் | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.5 | திரு. வாஞ்சிநாதன் | காவல் உதவி ஆய்வாளர் |

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–1/ அரசு தரப்பு சாட்சி.5 | 29.09.2023 | புகார் மனுவில் உள்ள கையெழுத்து |
| அரசு தரப்பு சான்றாவணம்–2/ அரசு தரப்பு சாட்சி.5 | 29.09.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்–3/ அரசு தரப்பு சாட்சி.5 | 29.09.2023 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–4/ அரசு தரப்பு சாட்சி.5 | 29.09.2023 | மாதிரி வரைபடம் |

3. அரசு தரப்பு சான்று பொருட்கள்: இல்லை.

4. எதிரி தரப்பு சாட்சிகள்: இல்லை.

5. எதிரி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்: இல்லை

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.30 21:42:37 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

குறிப்பு

1.தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2.இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்து வருகின்றார்.
3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.